பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.08.03.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு மார்ச் மாதம் 8 ம் நாள் (08 .03.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

<table>
<tr><td>பொருள்.1</td><td>பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களின் பிப்ரவரி 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>பொருள்.2</td><td>பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>பொருள்.3</td><td>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணபத்தில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமையாணை கட்டணங்கள் அரசாணை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.04.02.2019ன் படி கட்டிட உரிமை காலம் 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக மாற்றி அமைக்கப்பட்டுட்ளளது. ஆகையால் பரமக்குடி நகராட்சி பகுதியில் வழங்கப்படும் கட்டிட உரிமை ஆணை மற்றும் இதர கட்டணங்கடள் நிர்ணயம் செய்து 01.05.2019 முதல் கீழ்கண்டுள்ளவாறு வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>திருத்திய கட்டணம்</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>தமிழ்நாடு நகராட்சிகளின் சட்ட விதி மற்றும் பிரிவு</th><th>உரிமையாணை கோரும் இன விபரம்</th><th>01.10.2016 முதல் உள்ள கட்டண விகிதம்</th><th>01.05.2019 முதல் திருத்திய கட்டண விகிதம்</th><th>அளவு</th><th>உரிமை யாணை காலம்</th></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td>(3)</td><td>(4)</td><td>(5)</td><td>(6)</td><td>(7)</td></tr>
<tr><td>1</td><td>175, 176</td><td>புதிதாக மனைப்பிரிவு செய்து சாலை அமைக்க</td><td>6000</td><td>1000</td><td>ஒவ்வொரு 500 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு</td><td>1 தடவை</td></tr>
<tr><td>2</td><td>175, 176</td><td>மனை உட்பிரிவு செய்ய</td><td>1000</td><td>250</td><td>ஒவ்வொரு மனைக்கும்</td><td>1 தடவை</td></tr>
<tr><td>3</td><td>183(2)</td><td>தெருக்களில் போக்குவரத்து இடையூறு இன்றி பந்தல் மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு (கோவில் திருவிழா, ஈமச்சடங்குகள், அரசியல் காரியங்கள், திருமணம் மற்றும் நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட மார்ச் முதல் மே முடிய மட்டும் வேணல் பந்தல்களுக்கு அனுமதி இலவசம்)</td><td>150</td><td>20</td><td>1 சதுர மீட்டர்</td><td>1 வாரம்</td></tr>
</table></td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 183(2) | 1. தெருக்களின் ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி கட்டிட சாமான்கள் கல், மண் மற்றும் அதன் இனங்கள் வைத்துக் கொள்ள குறைந்த பட்ச கட்டணம் | 20 | குறைந்த பட்சம் ரூ.1500/– அல்லது கட்டுமான அளவிற்கு ச.மீ.க்கு ரூ.40/– | 1 சதுர மீட்டருக்கு | கட்டிட பணி முடியும் வரை |
| 5 | 197 | கட்டிட மனை அங்கீகாரம் செய்ய (மனையின் பரப்பு) 1 ச.மீ | 300 | 500 | 200 சதுர மீட்டர் வரை | 5ஆண்டுகள் |
| | | கட்டிட மனை அங்கீகாரம் செய்ய (மனையின் பரப்பு) 1 ச.மீ | 1000 | 1000 | 200 சதுர மீட்டருக்கு மேல் | 5ஆண்டுகள் |
| 6 | 199 | புதிதாக கட்டும் மாற்றியமைக்கும் தார்சு குடியிருப்பு கட்டிடத்திற்கு | | | | |
| | | 1. ஸடில்ட் தளம் | –– | 400 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 2. தரைதளம் | 290 | 400 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 3. முதல்தளம் | 380 | 500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 4. 2ம் தளம் | 450 | 600 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 5. 3ம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள மாடிக்கு | – | 1000 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| 7 | 199 | குடியிருப்பு அல்லாத தொழிற்சாலை கடை அலுவலகம் பள்ளி கிடங்கு போன்ற வியாபர கட்டிடங்களுக்கு | | | | |
| | | 1. ஸடில்ட் தளம் | –– | 500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 2. தரைதளம் | 400 | 500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 3. முதல்தளம் | 700 | 1000 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 4. 2ம் தளம் | 1400 | 1500 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| | | 5. 3ம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள மாடிக்கு | – | 2000 | 10 சதுர மீட்டர் | 5ஆண்டுகள் |
| 8 | 197(1) | பக்க எல்லை சுற்றுச்சுவர் கட்டுமானம் செய்ய | | | | |
| | | 2.4 மீ உயரத்திற்கு உட்பட்டு | 120 | 200 | 1 மீ நீளத்திற்கு | 5ஆண்டுகள் |
| | | 2.40 மீ உயரத்திற்கு மேல் | 240 | 300 | 1 மீ நீளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 9 | 197(1) | சுவர் மராமத்து தளம் பூச்சு போன்ற மராமத்து வேலைகள் செய்ய (கட்டுமான அமைப்பில் எவ்விதமான மாற்றம் செய்யாமல்) | 1800 | 3000 | ––– | 1 தடவை |
| 10 | 197 | மாடிப்படிக்கட்டு கட்டுமானம் | 1440 | 1500 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 11 | 197 | குளியலறை கட்டுமானம் | 240 | 400 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | 197 | மல இருக்கை | 240 | 400 | ஒவ்வொரு தளத்திற்கு | 5ஆண்டுகள் |
| 13 | 207 | கிணறு/குழாய் கிணறு | 360 | 1000 | மனை ஒன்றிற்கு | 5ஆண்டுகள் |
| 14 | | கட்டிட விண்ணப்பம் கூர்ந்தாய்வு கட்டணம் | --- | 500 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 15 | | திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் திரும்ப சமர்ப்பிக்க | – | 300 | விண்ணப்பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 16 | | கட்டிட அனுமதி வரைபட நகல் | 360 | 500 | நகல் ஒன்றுக்கு | 1 தடவை |
| 17 | | கட்டிட வரைபட வரைவாளர் பதிவு கட்டணம் | 2500 | 5000 | 1 நபர் | ஒரு வருடத்திற்கு |
| 18 | | கட்டிட வரைபட வரைவாளர் புதுப்பித்தல் கட்டணம் | 1800 | 5000 | 1 நபர் | ஒரு வருடத்திற்கு |
| 19 | | கேபிள் டி.வி.வீடியோ லைப்ரரி மற்றும் நகராட்சியின் தடையின்மை சான்று பெறும் இனங்களுக்கு | 1200 | 2500 | ஒன்றிற்கு | 1 தடவை |
| 20 | | முழுமை திட்ட பயன்பாடு குறித்த சான்று வழங்க | – | 1500 | ஒன்றிற்கு | 1 தடவை |
| 21 | பி.பி.ஆர். சட்டம் | பி.பி.ஆர்.சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தற்காலிக பந்தல் அமைக்க | 360 | 500 | 10ச.மீ | |
| 22 | | பொருட்காட்சி மற்றும் விளையாட்டு அரங்கம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்க | 360 | 500 | 10ச.மீ | 1 மாதம் மட்டும் |
| 23 | 183 | சர்வே கட்டணம் | | | | |
| | | 1) புலப்பட நகல் | 600 | 600 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 2) நிலப்பதிவேடு நகல் | 360 | 500 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 3) எப் லைன் அளக்க | 500 | 500 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| | | 4) உட்பிரிவு கட்டணம் | 360 | 500 | 1 நகரளவு எண்ணிற்கு | 1 தடவை |
| 24 | | நன்னிலை வரி ஒவ்வொரு இனங்களுக்கு ரூ.300/– அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் | 300 | 300 | | |
| 25 | | தொழிலாளர் நல நிதி தொகை தற்போதுள்ள சந்தை மதிப்பீட்டின்படி சதுர அடிக்கு ரூ.1400/– வீதம் கட்டிடப் பணி மேற்கொள்ளபடுவதால் | 130 | 130 | 1 ச.மீ. | 1 தடவை |
| 26 | | அபிவிருத்தி கட்டணம் நிலத்திற்கான கட்டணம் | ரூ..2/1ச.மீ | 2 | 1 ச.மீ. | 1 தடவை |
| 27 | | கட்டிட அனுமதிக்கப்படும் இடத்திற்கான கட்டணம் குடியிருப்பு | ரூ.10/1ச,மீ | 10 | 1 ச.மீ. | 1 தடவை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28 | | வணிகம்,கல்வி உபயோகம் மற்றும் பிற வகையான உபயோகம் | ரூ.20/1ச,மீ | 20 | 1 ச.மீ. | 1 தடவை |
| 29 | | அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபட நகல் வழங்க | --- | 1500 | நகல் ஒன்றிற்கு | 1 தடவை |
| 30 | | முழுமை திட்ட நிலஉபயோகம் மாற்றம் குறித்து பெறப்படும் விண்ணப்பங்கள் மேலனுப்பி வைக்க | --- | 5000 | விண்ணப் பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 31 | | கட்டிட அனுமதி மேல்முறையீடு விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துறைக்கு மேலனுப்பி வைக்க | --- | 5000 | விண்ணப் பம் ஒன்றிற்கு | 1 தடவை |
| 32 | | விளம்பர கட்டணம் | | | | |
| | | 1) நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் பிரதான சாலைகள் | --- | 300 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |
| | | 2) பிற சாலைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் | --- | 250 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |
| 33 | | தரை வாடகை | | | | |
| | | 1) நகராட்சி இங்கள் மற்றும் சாலைகள் | --- | 250 | 1 ச.மீ. | ஆறு மாதத்திற்கு |

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட கட்டிட உபவிதிமுறைகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு உரிய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.566/2019/எப்2)

**பொருள்.4**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப்பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதியும் இல்லாததால் அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படுவதால், மேற்படி பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதி சாலைகள் அமைக்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர் ஒப்பந்ததாரர் | 0.09% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர் | 0.80% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.09% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட முதுவை டிம்பர் மேற்கு, LICபின்புறம், ஆதிதிராவிடர் காலனி, முல்லை நகர் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா அமைவிடங்கள் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்:15081/2018/டிபி3, நாள்:09.07.18 அன்று நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்கா அமைவிடங்களை பாதுகாக்கும் பொருட்டு வேலி அமைத்து பெயர்பலகைகள்

அமைக்கும் பணி ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. வி. மேகவர்ணம்,<br>ஒப்பந்ததாரர் | 1.32% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.06% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.6**

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21, 24, 29 ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள வடிகால்களை சரிசெய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர் | 0.81% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |
| 2 | திரு. ஆர். ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர் | 0.09% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.09% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான மதுரை – இராமேஸ்வரம் சாலையில் அமைந்துள்ள வணிக வளாக கட்டிடத்தில் முதல் தளம் காலியாக உள்ளதை சரிசெய்து குத்தகைக்கு விடும் பொருட்டு மேற்படி கட்டிடத்தில் மராமத்துப்பணிகள்ரூ. 80,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர்<br>ஒப்பந்ததாரர் | 1.59% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |
| 2 | திருமதி. கே. தமிழரசி,<br>ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. கே. தமிழரசி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.8**

பரமக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அலுவலக வரிவசூல் மையத்திற்கு மேல் உள்ள முதல் தளத்தில் டைல்ஸ் தளம் உடைந்தும், வருவாய் பிரிவில் உள்ள கழிப்பறை மற்றும் மேற்கூரை பழுதடைந்து உள்ளதை மராமத்துப்பணிகள் ரூ.50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. பி. சசிவர்ணம் ஒப்பந்ததாரர் | 0.29% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. எஸ். சந்திரன் ஒப்பந்ததாரர் | 1.27% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. சசிவர்ணம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.29% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, 13, 25, 3, 34 மற்றும் 30 ஆகிய வார்டுகளில் உள்ள சிறுபாலம் மற்றும் வடிகால் பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. பி. சசிவர்ணம், ஒப்பந்ததாரர் | 0.04% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 0.42% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. சசிவர்ணம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.04% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.10**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட காவேரி கூட்டு குடிநீர் திட்டம் வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தினசரி வழங்கப்பட்டு வரும் குடிநீருக்கான கணக்கீடு வேறுபாடாக உள்ளது. எனவே, மேற்படி நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய்களில் அளவுமானி பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி பொருத்தப்பட்ட அளவுமானிகளில் தினசரி கணக்கீடு செய்யும் பொருட்டும் அளவுமானிகளை உரிய பாதுகாப்புடன் பராமரிக்கும் பொருட்டு வால்வு தொட்டிகள் அமைக்கும் பணி ரூ.2,50,000/– மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். .01.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி பணிக்கு 28.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எஸ். சிவசுந்தரம் ஒப்பந்ததாரர் | 0.08% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 1.46% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சிவசுந்தரம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.08% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் ஈஸ்வரன் கோவில் 6வது தெரு பகுதியில் வறட்சி காரணமாக சிறுமின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.01.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 28.02.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திருமதி. வி. பால்கரசி ஒப்பந்ததாரர்</td><td>0.02% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>0.15% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. வி. பால்கரசி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் 2017–18 மற்றும் 2018–19ம் ஆண்டு விபரங்களை தமிழ் நாளிதழ்களில் சிறப்பு மலராக வெளியிட மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண்.176/செமதொ/2018, நாள்.11.09.2018ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க தினத்தந்தி நாளிதழ் சிறப்பு மலரில் வெளியிட்ட வகைக்கு ரூ.41580/–ம், தமிழ்சுடர் நாளிதழுக்கு ரூ.12600/–ம் ஆக மொத்தம் ரூ.54180/–ஐ மேற்கண்ட நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 36 வரை உள்ள சிறுமின் விசைப்பம்பில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டால் அதனை அகற்றி புதிதாக மாற்று மோட்டார்கள் பொருத்தவும், பராமரிப்பு பணி செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். ன்படி அனுமதி பெறப்பட்டு 07.03.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர்</td><td>0.01% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>3.73% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல்</td></tr>
</table></td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு –

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள சிறுமின் விசைப்பம்பில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டால் அதனை அகற்றி புதிதாக மாற்று மோட்டார்கள் பொருத்தவும், பராமரிப்பு பணி செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள். ன்படி அனுமதி பெறப்பட்டு 07.03.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர் | 1.20% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அலுவலகக்குறிப்பு –

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.15**

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல் செம்மைபடுத்தும் பணிகள், சேர்த்தல், நீக்கல், திருத்தம், இடம்மாறுதல் போன்றவைகளுக்கு சிறப்பு முகாம் மற்றும் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்கள் 6, 7, 8, 8எ மொத்தம் 2100—யை பாராளுமன்ற தேர்தல் மற்றும் பரமக்குடி சட்டமன்ற இடைத்தேர்தலுக்கு முன்னறே வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என்பதால், மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம், சார் ஆட்சியர், பரமக்குடி அவர்களின் நேரடி அறிவுறையின்படி, தேர்தல் அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சியர் சட்டம் 1920, பிரிவு 15ன் கீழ் கீழ்கண்டுள்ள செலவினங்கள் செய்யப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1)வாக்காளர் படிவங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய, இவ்வலுவலகத்தில் ஸ்கேனர் கருவிகள் அதிக அளவு இல்லாததால், 2 எண்ணம் ஸ்கேனர் கருவி வாங்கிய தொகை ரூ.11,100/— Best Network, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு வழங்கியது.

2)தேர்தல் இணையதளத்தில் (Ero net) 2900 படிவங்களையும் உடனடியாக பதிவேற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதால், பதிவேற்றம் செய்யப்பட்ட செலவினம் ரூ.8700/—யை வழங்கியது.

3)மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களால் தேர்தலில் வாக்க அளிக்கும் அவசியத்தினை கருதி, 12 வகை சீல்களை செய்து, வழங்கப்பட்டதற்கு செலவினம் ரூ.1100/—யை வழங்கியது.

**பொருள்.16**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் இந்நகராட்சிக்கான திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016ல் இயற்றப்பட்டு அதன்படி குடியிருப்பு வாசிகள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து குப்பைகளை சேகரித்து அறிவியல் முறைப்படி இறுதியாக்கம் செய்வதற்கு பயனர் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பரமக்குடி வியாபாரிகள் சங்கத்தினரின் கோரிக்கையில், சில வணிக நிறுவனங்களுக்கு மட்டும் நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனர் கட்டணத்தை , அந்நிறுவனங்கள் குப்பை உருவாக்கும் அளவிற்கேற்ப ஆய்வு செய்து மறு நிர்ணயம் செய்ய கோரப்பட்டதைத் தொடர்ந்து, ஆய்வு செய்யப்பட்டதில் சில குறிப்பிட்ட வணிக நிறுவனங்களுக்கு குப்பை உருவாகும் அளவிற்கேற்ப பயனர் கட்டணத்தை குறைத்து மறு நிர்ணயம் செய்யலாம் என கண்டறியப்பட்டது. அதன்படி, வியாபாரிகள் சங்கங்களின் கோரிக்கையினையேற்று பின்வரும் வணிக நிறுவனங்களுக்கு பயனர் கட்டணம் மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெருமாளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களான திருமண மண்டபங்களில் உற்பத்தியாகும் குப்பைகளில் இறுதியாக்கம் செய்யக் கூடிய மக்கும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி, தனியார் நிறுவனத்தின் மூலம் சேகரம் செய்து இறுதியாக்கம் செய்ய திருமண மண்டபங்களின் உரிமையாளர்களுக்கும், தனியார் நிறுவனத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். மேலும், மக்காத உலர் கழிவுகள் மட்டும் நகராட்சி மூலம் சேகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்களில் உருவாகும் குப்பைகளை சேகரிக்க சிறிய திருமண மண்டபங்களில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றிற்கு ரூ.500/— வீதமும், பெரிய திருமண

மண்டபங்களுக்கு ரூ.1000/– வீதமும் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்போது பெருமளவு குப்பை உற்பத்தி செய்பவர்கள் இறுதியாக்கப் பணி தனியார் மூலம் செய்யப்பட இருப்பதால், மக்காத உலர் கழிவுகள் மட்டும் சேகரிப்பதற்கு பயனர் கட்டணமாக சொத்துவரி ரூ.1001 முதல் ரூ.2000 வரையுள்ள திருமண மண்டபங்களுக்கு ரூ.50/– வீதமும், ரூ.2001க்கு மேல் உள்ள திருமண மண்டபங்களுக்கு ரூ.100/– வீதமும் சம்மந்தப்பட்ட திருமண மண்டபங்களின் சொத்துவரி விதிப்பிலேயே சேர்த்து வசூல் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை–1**

**திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டணம் பின்வருமாறு மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.**

| வ. எண் | பொருள் | காலம் | பழைய கட்டணம் ரூபாய் | மறுநிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|---|
| | **3.வணிகம்** | | | |
| அ | டீ ஸ்டால்/சிற்றுண்டி | மாதம் ஒன்றுக்கு | 100.00 | 50.00 |
| ஒ | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் ஒன்றுக்கு | 200.00 | 100.00 |
| ஔ | 1. சில்லறை மளிகை<br>2. மளிகை மொத்த வியாபாரம்<br>3. ஸ்டேசனரி<br>4. மருந்தகம் | மாதம் ஒன்றுக்கு | –<br>300<br>300<br>300 | 50.00<br>100<br>100<br>100 |
| | **4.மற்றவை** | | | |
| இ | ஜவுளிக்கடை சிறியது | மாதம் ஒன்றுக்கு | – | 100.00 |
| | ஜவுளிக்கடை பெரியது | மாதம் ஒன்றுக்கு | – | 300.00 |
| ஒ | தங்கும் விடுதி | மாதம் ஒன்றுக்கு | – | 500.00 |
| ஒ | 1. நகை கடை<br>2. நகை அடகு கடை<br>3. பாத்திரக்கடை | மாதம் ஒன்றுக்கு | – | 50<br>50<br>50 |
| ஔ | இதர கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் | மாதம் ஒன்றுக்கு | – | 100 |

அலுவலக குறிப்பு –

1. வணிக நிறுவனங்களுக்கு குப்பை கழிவுகளை சேகரிப்பதற்கான உபயோகிப்பாளர் கட்டணத்தை மறுநிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

2.திருமண மண்டபங்களுக்கு குப்பை கழிவுகளை சேகரிப்பதற்கான பயனர் கட்டணத்தை மறு நிர்ணயம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.17**

நிர்வாக நலன் கருதி தேர்தல் சம்மந்தமாக தடையின்மை சான்று (NOC) வழங்குவதற்கு ரூ.500/–வீதமும், சொத்துவரி செலுத்தியதற்கான சான்று வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு ரூ.200/– வீதமும், சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண பெயர் மாற்றம் செய்ய கட்டணம் ரூ.500/–ம் மற்றும் குடிநீர் இணைப்பு பழுது பார்க்க ஒரு இணைப்பிற்கு ரூ.1000/– வீதமும் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.18**

**<u>2019ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 12-ன்கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.4555/2013/P3 நாள்.28.02.2019ன்படியும் 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் 12ன்படியும் (No. of 2019 The Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No.75 dt. 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுபுறசூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84 நாள்.25.06.2018ன்படியும் தமிழக நகராட்சி பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and throwaway plastics) நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில பரமக்குடி நகராட்சி பகுதியில் ஒருதடவை மட்டும் பயன்படுத்தப்பட்ட(Use and throw) மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல்

பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை **செய்ய** இந்நகர்மன்றதீர்மானம் எண்.866 நாள் 08.03.2019ன்படி ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கை செய்யப்படுகிறது.

1. **(i) செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

**(ii)ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

**(iii)மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

**(iv)தண்டனைகள் விதிக்கும் முறைகள்**:

இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

**வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு** :

I. மொத்தமாக (Whole sale)
சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

IV.சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3.இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4.அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5.மேல் முறையீட்டுக்கு உரிமை:-**

பரம**க்குடி** நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் பரம**க்குடி** நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6. **தண்டனைகள் விபரம்:-**

**அட்டவணை II**

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வ. எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ii | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| | iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| | iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**(ந.க.எண்.771/2015/எச்1)**

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.